# கடற்கரை கவியரங்கு– 641

**நாள்: 01-09-2024**

# மனம் தெளிந்து வெல்வோம்!

அடியேது முடியேது? ஆனந்த நிலையே அது!
வடிவாக பரம்பொருளை வார்த்தது மானிடமே!
முடியென்றும் அழகுசடை யென்றும் மோகித்தே,
வடிவாக பலநிலையில் மனம்தேடி தொழுதே,

மடிமீதில் தாலாட்டி மானுடம் போல் உறவுசெய்து,
மகன்எனவாய், மைத்துனன் எனவாய்க் கூறிமகிழ்ந்து,
இகத்திலே அவையாவும் புராணமாய்ப் பொலிந்திட,
அகம்சூடி நாளும் அவற்றிலே நிலைகொண்டு,

அறியாமை மனம்கூடி அழற்றுமே மானுடம்தான்!
செறிவான சிந்தனைக்கு ஏனோ வேலையில்லை!
அறிவாக உள்ளத்தை ஆக்கும் நிலையில்லை!
அன்பதனால் உலகத்தை தேற்றும் நிலையில்லை!

என்புதனைப் போர்த்தவுடல் இறுதிவரை போராடும்!
எள்ளிநகையாடி ஏளனத்தில் மனம் மகிழும்!
கள்ளமில்லா மனத்திலே கலக்கமின்றி அரங்கேறி,
உள்ளத்தில் ஒளியேற்றி உலகத்து இருள்நீக்கி,

தெள்ளத் தெவிட்டாத தேன்சுவையாய் வாழ்வியலை,
உள்ளத்து உவகையோடு அறிந்திடல் வேண்டுமன்றோ?
எள்ளத்தனைத் தயக்கமின்றி, ஏற்றிடும் மனம்தானே,
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததாய் அறிவோமே!

**- கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**
**29-08-2024 (இரவு:11-30)**